**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
*Ang Mo Kio Tamil Methodist Church*

**11th ஜனவரி / January 2026 ஞா யிறு ஆராதனை**

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு** Call to Worship | **திருமதி. கோஹிலா** Mrs. Kohila |
| **இறைவணக்கப்பாடல்** Introit | **பாடகர் குழு** Choir |
| **ஜெபம்** Prayer | **திருமதி. கோஹிலா** Mrs. Kohila |
| ✝ **தொடக்க பாடல்** Opening Song | **சபையார் இணைந்து** Congregation |

***ராயர் மூவர் கீழ்தேசம்***

*1. ராயர் மூவர் கீழ்தேசம்*
*தேடி வந்தோம் வெகுதூரம்*
*கையில் காணிக்கைகள் கொண்டு*
*பின் செல்வோம் நட்சத்திரம்*

**ஓ ஓ ராவின் ஜோதி நட்சத்திரம்**
**ஆச்சரிய நட்சத்திரம்**
**நித்தம் வழி காட்டிச் செல்லும்**
**உந்தன் மங்கா வெளிச்சம்**

*2. பெத்லகேம் வந்த ராஜாவே*
*உம்மை நித்திய வேந்தர் என்றேன்*
*க்ரிடம் சூட்டும் நற்பொன்னையே*
*வைத்தேன் உம் பாதமே — ஓ*

*3. தூப வர்க்கம் நான் ஈவேன்*
*தெய்வம் என்று தரிசிப்பேன்*
*ஜெப தூபம் ஏறெடுப்பேன்*
*உம் பாதம் பணிவேன் — ஓ*

*4. வெள்ளை போளம் நான் ஈவேன்*
*கொண்டு வந்தேன் காட்டவுமே*
*துக்க பாவ பாரம் தாங்கி*
*மரிப்பார் இவரே — ஓ*

| | |
|---|---|
| ✝ **மாறி வாசித்தல் 2ம் ஞாயிறு** *"சங்கீதம் 8"* | **சபையார் இணைந்து** Congregation |

"கர்த்தரின் நாமம் எவ்வளவு மேன்மையானது!"
Psalter Reading "Psalm 8"

| | |
|---|---|
| ✝ **தந்தை போற்றி** Gloria Patri | **சபையார் இணைந்து** Congregation |
| **துதி ஆராதனை** Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்** Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்** Lord's Prayer | **சபையார் இணைந்து** Congregation |
| ✝ **காணிக்கை பாடல்** Offertory Song | **சபையார் இணைந்து** Congregation |

***இவரே பெருமான்***

**இவரே பெருமான், மற்றுப்**
**பேர் அலவே பூமான், - இவரே பெருமான்.**

*1. கவலைக் கிடங்கொடுத் தறியார் - வேறு*
*பலவினை யாதுமே தெரியார் - இப்*
*புவனமீது நமக்குரியார் - இவரே*

*2. குருடர்களுக் குதவும் விழியாம், - பவக்*
*கரும இருளை நீக்கும் ஒளியாம், - தெய்வம்*
*இருக்குந் தலஞ்செல் வாசல் வழியாம் - இவரே*

*3. பலபிணி தீர்க்கும் பரிகாரி, - சொல்லும்*
*வலமையில் மிக்க விபகாரி, - எக்*
*குலத்துக்கும் நல்ல உபகாரி. - இவரே*

*4. அறஞ் செய்வதினில் ஒரு சித்தன், - கொடு*
*மறம்விடு பவர்க்கருள் முத்தன் - இங்கே*
*இறந்தோர்க் குயிரீயும் கர்த்தன். . - இவரே*

*5. அலகைதனை ஜெயித்த வீரன், - பவ*
*உலகை ரட்சித்த எழிற்பேரன், - விண்*
*ணுலக வாழ் தேவ குமாரன். . - இவரே*
*6. பொன்னுலகந் தனில்வாழ் யோகன், - அருள்*
*துன்ன உலகில் நன்மைத் தேகன், - நம்பால்*
*தன்னை யளித்த ஓர் தியாகன். . – இவரே*

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **திரு. ஆல்ஃபிரட்**
**மத்தேயு *2 : 1 - 12*** — Mr. Alfred

Scripture Reading
Matthew 2 : 1 - 12

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Closing Song — Congregation

<u>தேவாதி தேவன் ராஜாதி ராஜன்</u>

***தேவாதி தேவன் ராஜாதி ராஜன்***
***பாவ உலகினில் வந்துதித்தார்***

***ஏரோது மாளிகை தேடாத மா ராஜன்***
***ஏழை தொழுவத்தில் ஜெனித்தவர்***

*1. வானத்தில் தோறும் ஓர் நட்சத்திரம்*
*வான சாஸ்திரிகள் முன்னில் சென்றாலும்*
*பாதை தவறியே சோகமடைந்த பின்*
*பாலகன் இயேசுவைக் கண்டடைந்தார்*

*2. அன்னை மரியாள் அளவில்லாத*
*ஆசிர் வாதங்கள் மிக அடைந்தாள்*
*அந்த கிருபைகள் சொந்தமுடன் பெற*
*ஆண்டவர் இயேசுவைக் கண்டடைவோம்*

*3. சத்திரத்தில் ஸ்தலமில்லையே*
*சத்திய தேவன் தலை சாய்க்கவே*
*தாழ்மை சொரூபியே தாழ இறங்கியே*
*தங்கும் தொழுவத்தைக் கண்டடைவோம்*

*4. ஆண்டவன் பிறந்த பெத்லகேம்*
*ஆயிரங்களில் சிறிய ஸ்தலம்*
*இஸ்ரவேல் ராஜனை இம்மானு வேலனை*
*இன்பமுடன் தேடிக் கண்டடைவோம்*
*5. கண்ணாரக் கண்டேன் உம் இரட்சண்யத்தை*
*காலா காலமாகக் காத்திருந்தேன்*
*என்று சிமியோன் தன் கையில் எடுத்து நம்*
*இயேசுவை வாழ்த்தியே கண்டடைந்தான்*

*6. தள்ளின கல்லே தலைக்கல்லாக*
*தாமத மின்றி வருகின்றவர்*
*ஆயர் குடிலிடைப் பாலகனாய்த் தோன்றும்*
*தூய பிதா முகங் கண்டடைவோம்*

**அறிவிப்புகள்**
Announcements

✝ **<u>மனப்பாட வசனம்</u>** — **சபையார் இணைந்து**
<u>Memory Verse</u> — Congregation
**யோவான் *13 : 34 - 35***
John 13 : 34 - 35

***34. நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.***

***35. நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்**
Closing Prayer & Benediction

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ **சபையார் நிற்கவும் ⁄ Indicates Congregation standing**